பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**27 02 2026 FRIDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட PRACHAND இலகு ரக ராணுவ ஹெலிகாப்டர், சுயசார்பு இந்தியா இயக்கத்திற்கு வலுசேர்த்திருப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
2. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை கொண்டுவருவதில் மாநில அரசுகள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தியுள்ளார்.
3. நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த மூன்றாண்டுகளில் ஏழு சதவீதத்திற்கும் கூடுதலாக இருப்பது பொருளாதாரம் வலுப்பெற்றிருப்பதை காட்டுவதாக பொருளாதார ஆலோசகர் திரு அனந்த நாகேஸ்வரன் கூறியுள்ளார்.
4. வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகளில் நீதித்துறை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கு எதிராக மேற்குவங்க அரசு தொடர்ந்த வழக்கை, உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.
5. மரண தண்டனை நிறைவேற்றத்தை ஈரான் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஐ நா மனித உரிமைகள் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

- - இனி விரிவான செய்திகள் –

< < < < < < < > > > > > > >

**உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட PRACHAND இலகு ரக ராணுவ ஹெலிகாப்டர், சுயசார்பு இந்தியா இயக்கத்திற்கு வலுசேர்த்திருப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.**

**ராஜஸ்தான் மாநிலம், Jaisalmer விமானப்படை தளத்தில், PRACHAND ராணுவ ஹெலிகாப்டரில் அதிகாரிகளுடன் 25 நிமிடம் பயணித்த பின், பார்வையாளர் குறிப்பேட்டில் பதிவு செய்த குடியரசுத்தலைவர், இந்தப் பயணம் தமக்கு வித்தியாசமான அனுபவத்தை அளித்துள்ளதாக கூறியுள்ளார்.**

**நாட்டின் பாதுகாப்பு திறன் வலுப்பெற்று வருவது, பெருமிதம் அளிப்பதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

**Jaisalmer விமானப்படை தளத்தில், இந்த ராணுவ ஹெலிகாப்டரை வெற்றிகரமாக வடிவமைத்த அதிகாரிகளுக்கும், வல்லுநர்களுக்கும் தமது பாராட்டுகளை தெரிவிப்பதாகவும் குடியரசுத்தலைவர் குறிப்பிட்டுள்ளார்.**

**<<<<<<<>>>>>>>**

**செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை நம்பிக்கையோடும், பொறுப்போடும் செயல்படுத்த வேண்டும்**

என்று மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை கொண்டுவருவதற்கான ஒவ்வொரு நடவடிக்கையும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறினார்.

இந்த துறையில் திறன் மேம்பாட்டை உறுதி செய்ய மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை நடைமுறைக்கு கொண்டுவரும் முயற்சியில் மாநில அரசுகளும், பெரிய அளவில் ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>>>

நடப்பு நிதியாண்டின் 3வது காலாண்டில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7 புள்ளி எட்டு சதவீதமாக உள்ளது.

மத்திய புள்ளியியல் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 2025-26ஆம் நிதியாண்டில் ஒட்டுமொத்த

**பொருளாதார வளர்ச்சி, 7 புள்ளி ஆறு சதவிதமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**2022-23-ஆண்டை அடிப்படையாக கொண்டு இந்த புள்ளி விவரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.**

**கோவிட் பெருந்தொற்று காரணமாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த 2011-12 அடிப்படை ஆண்டை, புள்ளியியல் துறை மாற்றம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

**நாட்டின் உற்பத்தித் துறையின் முறையான செயல்பாடு காரணமாக, தொடர்ச்சியாக 3 ஆண்டுகளில், பொருளாதாரம் விரைவான வளர்ச்சியை நோக்கி சென்று கொண்டிருப்பதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.**

**2023ஆம் ஆண்டு முதல் 2026ஆம் ஆண்டு வரை நாட்டின் உற்பத்தி துறை, இரட்டை இலக்க வளர்ச்சியை பதிவு செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**நடப்பு நிதியாண்டில் 2 மற்றும் மூன்றாவது பிரிவு துறைகள் 9 சதவீத வளர்ச்சி கண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**வர்த்தகம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு சேவைகள் உள்ளிட்டவற்றில், 10 புள்ளி ஒரு சதவீத வளர்ச்சி**

ஏற்பட்டுள்ளதாகவும் மத்திய புள்ளியியல் துறை தெரிவித்துள்ளது.

இதனிடையே, இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய நாட்டின் பொருளாதார ஆலோசகர் திரு அனந்தநாகேஷ்வரன், கடந்த மூன்றாண்டுகளில் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி ஏழு சதவீதத்திற்கும் கூடுதலாக இருப்பது பொருளாதாரம் வலுப்பெற்றிருப்பதை காட்டுவதாக தெரிவித்துள்ளார்.

உலக அளவில் பொருளாதார நெருக்கடிகள் உள்ள போதிலும், இந்தியா விரைவான வளர்ச்சி பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

<<<<<<<>>>>>>>

பாதுகாப்பு தொழில் உற்பத்தி மற்றும் வர்த்தகத்தில் இந்தியாவும் – இத்தாலியும் ஒத்துழைப்பை வலுப்படுத்த உறுதிபூண்டுள்ளதாக பாதுகாப்புத்துறை செயலர் திரு சஞ்ஜீவ் குமார் தெரிவித்துள்ளார்.

இத்தாலியின் ரோம் நகருக்கு இரண்டு நாள் பயணம் மேற்கொண்டுள்ள அவர், ராணுவ தளவாட கொள்முதல் குறித்த

இந்தியாவின் கொள்கைகளையும், நடைமுறைகளையும் எடுத்துரைத்தார்.

பாதுகாப்புத் துறையில் வெளிநாட்டு நேரடி முதலீடு, பாதுகாப்புத் தொழில் நெடும்பாதை திட்டம் உள்ளிட்டவை குறித்தும் தாம் எடுத்துரைத்ததாக அவர் கூறியுள்ளார்.

இத்தாலியின் பாதுகாப்புத்துறை துணைச்செயலர் Matteo Perego-வை தாம் சந்தித்து பேசியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்தாலிய தலைமை ராணுவ அதிகாரி ஜென்ரல் Luciano மற்றும் உயரதிகாரிகளுடனும் தாம் கலந்தாலோசித்ததாக திரு சஞ்ஜீவ் குமார் தெரிவித்துள்ளார்.

இந்த பேச்சுக்களின்போது பாதுகாப்புத் தொழில் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான கட்டமைப்புகளை உருவாக்குவது குறித்தும் விவாதிக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

மேற்குவங்க மாநிலத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் தேர்தல் ஆணையம் நியமித்த

நீதித்துறை அதிகாரிகளுக்கு எதிராக, அம்மாநில அரசு தாக்கல் செய்த மனுவை, உச்சநீதிமன்றம் ஏற்க மறுத்துள்ளது.

மனுவை விசாரித்த தலைமை நீதிபதி திரு. Surya Kant தலைமையிலான அமர்வு, வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணிகளில் நியமிக்கப்பட்டுள்ள நீதித்துறை அதிகாரிகள், எந்தவொரு நிர்பந்தத்திற்கும் ஆளாக மாட்டார்கள் என்று தெரிவித்தது.

அவர்களுக்கான முறையான பயிற்சியை தேர்தல் ஆணையம் வகுத்திருப்பதாக தலைமை நீதிபதி குறிப்பிட்டார்.

இந்த விஷயத்தில் உச்சநீதிமன்ற தீர்ப்பை மீறி, மாநில அரசோ, தேர்தல் ஆணைய அதிகாரிகளோ செயல்படக்கூடாது என்றும், உச்சநீதிமன்ற அமர்வு தெரிவித்தது.

மேற்குவங்க மாநிலத்தில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை மேற்கொள்ளும் பணியில் தேர்தல் அதிகாரிகளாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தவிர, ஜார்க்கண்ட் மற்றும் ஒடிசா மாநிலங்களில் உள்ள நீதித்துறை அதிகாரிகளை வாக்காளர் பட்டியல் கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்க உச்சநீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை நியமித்து உத்தரவிட்டிருந்தது.

<<<<<<<>>>>>>>

மரண தண்டனை நிறைவேற்றுவதை ஈரான் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் திரு Volker Turk வலியுறுத்தியுள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ நா மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தில் உரையாற்றிய அவர், மரண தண்டனை நிறைவேற்றத்தால் அதிக அளவு உயிரிழப்பு ஏற்படக்கூடும் என்றும் எச்சரித்துள்ளது.

இரண்டு குழந்தைகள் உட்பட எட்டு பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பது கவலைக்குரியது என்றும் அவர் கூறினார்.

மேலும், தண்டனை விதிக்கப்பட்ட 30 பேரின் நிலைமையையும் ஆராய வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

இந்தியா – பிரிட்டன் உள்துறை விவகாரங்களுக்கான ஆறாவது சுற்று பேச்சுவார்த்தை இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

இதுதொடர்பாக உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தற்போதுள்ள இருதரப்பு ஒத்துழைப்பு

குறித்தும், இதனை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் இருதரப்பிலும் கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதத்தை முறியடிப்பது, திட்டமிட்ட குற்றச் செயல்களை ஒடுக்குவதற்கான முயற்சிகள் போன்றவை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

காலிஸ்தான் ஆதரவு வன்முறை குழுக்கள், பிரிட்டனில் தங்கியிருந்து, இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது குறித்தும் தெரிவிக்கப்பட்டது.

போதைப்பொருள் கடத்தல், ஊடுருவல், சட்டவிரோத இடம்பெயர்தல் குறித்தும், குற்றவியல் சட்ட நடைமுறைகளில் ஒத்துழைப்பு வலுப்படுத்துவது குறித்தும் இந்த பேச்சுவார்த்தையில் இடம்பெற்றது.

இணையதள பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இந்திய தூதரக அதிகாரிகள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்பை பிரிட்டன் உறுதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்திய தரப்பில், உள்துறை செயலர் டாக்டர் ராஜேந்திர குமாரும், பிரிட்டன் தரப்பில் அந்நாட்டின் உள்றைச் செயலர் திரு. Simon Ridley-யும் கலந்து கொண்டனர்.

<<<<<<<>>>>>>>

போதைப்பொருள் புழக்கத்தை தடுக்கும் இயக்கத்தின் ஒருபகுதியாக, இளைஞர்களின் விழிப்புணர்வு பேரணி இன்று கோவாவில் நடைபெற்றது.

இறுதியாக டாக்டர் ஷியாம பிரசாத் முகர்ஜி அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார், போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற உறுதிபாட்டுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இந்த இலக்கை எட்டுவதற்கு இளைஞர்களின் முழு ஒத்துழைப்பு தேவை என்றும் அவர் கூறினார்.

இளைஞர்கள் போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்.

**முதலமைச்சர் திரு பிரமோத் சாவந்த், மாநில அமைச்சர் திரு சுபாஷ் தேசாய் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.**

**<<<<<<<>>>>>>>**

**ஹிமாச்சலபிரதேசத்தின் Jaskot-ல் அமைக்கப்பட்டு வரும் ஹெலிகாப்டர் இறங்குக தள கட்டுமானப் பணிகளை அம்மாநில முதலமைச்சர் திரு. Sukhvinder Singh Sukhu இன்று பார்வையிட்டார்.**

**18 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வரும் ஹெலிகாப்டர் இறங்கு தள பணிகளை வரும் மே மாதத்திற்குள் முடிக்குமாறு அதிகாரிகளை அவர் கேட்டுக் கொண்டார்.**

**கோடை காலத்தில் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதற்கு இந்த ஹெலிகாப்டர் இறங்கு தளம் வசதியாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.**

**மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சி, பொருளாதாரத்தை உயரத்த்தும் என்றும் இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி தரும் என்றும் திரு. Sukhvinder Singh Sukhu கூறினார்.**

**<<<<<<<>>>>>>>**

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

**சிங்கப்பூர் சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Priyanshu Rajawat மற்றும் Anupama Upadhyaya-வும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.**

**ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் Priyanshu Rajawat, 21-13, 21-16 என்ற செட் கணக்கில், மலேசியாவின் Cheam June Wei-ஐ வென்றார்.**

**மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் Anupama Upadhyaya, 21-18, 21-14 என்ற செட் கணக்கில், மலேசியாவின் Shan Zi-ஐ வென்றார்.**

**ஆடவர் ஒற்றையர் பிரிவில் Saneeth Dayanand-ம், கலப்பு இரட்டையர் பிரிவில் Shruti Mishra — Ishaan Bhatnagar இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.**

**----------**

**Prague சர்வதேச செஸ் போட்டியின் இரண்டாவது சுற்றில் இந்தியாவின் அரவிந்த் சிதம்பரம், அமெரிக்காவின் Hans Moke Niemann-ஐ வென்றார்.**

**Hobart-ல் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியது.**

**<<<<<<<END>>>>>>>**